LIBRARY
2 3 SEP 1966
STATE LEGISLATURE MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 15th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

அரிஜனங்களுக்கு குடியிருப்பு நிலங்கள்

*287 கேள்வி—திரு. சி. சிவசுப்ரமண்யம்: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுகா -முட்லூர் மதுரா, மேட்டுக் குப்பத்திலுள்ள ஹரிஜனங்கள் குடியிருக்கும் புறம்போக்கு நிலத்தைத் தங்களுக்குப் பட்டா செய்துதர வேண்டுமென்று கோரி அரசாங்கத்திற்கு மனு கொடுத்துள்ளார்களா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யென்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) No petition on the subject has been received by the Government. However, it is seen from a report from the District Revenue Officer, South Arcot, that action is being taken by him to assign to the Harijans the portions they are already occupying.

திரு. செ. மாதவன்: புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்து போர்டு எடுத்ததற்குப்பின்னுலே ஹரிஜனங்கள் குடியிருக்கின்ற இடங்களிலிருந்தே கிளப்பக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைக் கவனிப்பது ரெவின்யூ போர்டா அல்லது பஞ்சாயத்தா என்ற தகராறு இருக்கிறது. ஆகையால் பொதுவாக ஹரிஜனங்கள் புறம்போக்கு நிலங்களில் குடி இருந்தால், அவர்களை ஒருக்காலும் அகற்றக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: அப்படிப் பொதுவாக உத்தரவு போடுவது சிரமம். காரணம், நம்முடைய சட்டப்படி பஞ்சாயத்தில் இருக்கக்கூடிய நிலங்களை கொடுக்கமுடியாது. அந்த நிலங்களை ரெவின்யூ இலாகாவிற்கு மாற்றி நிலம் இல்லாத ஏழை ஹரிஜனங் களுக்குக் குடியிருப்பதற்குத் தேவைப்பட்டால் அதைப் பரிசீலனை செய்து கொடுக்கப்படும்.